# நீர்கொழும்பு மாநகர சபை

# கேள்வி அறிவித்தல்

நீர்கொழும்பு மாநகர சபையினால் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குத்தகைகளை 2026-01-01ஆம் திகதி முதல் 2026-12-31ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக முத்திரையிடப்பட்ட இரு பிரதிகளுடனான கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | குத்தகையின் பெயர் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | முன்னக்கரய மாட்டிறைச்சிக் கடை | 693,000.00 | 50,000.00 | 3,000.00 |
| 02 | கொச்சிக்கடை மத்திய சந்தை மாட்டிறைச்சிக்கடை | 267,750.00 | 25,000.00 | 3,000.00 |
| 03 | கொச்சிக்கடை மத்திய சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 34,650.00 | 10,000.00 | 3,000.00 |
| 04 | கொச்சிக்கடை மத்திய சந்தை பன்றியிறைச்சிக்கடை | 221,025.00 | 25,000.00 | 3,000.00 |
| 05 | கீர்த்திசிங்க வீதி மாட்டிறைச்சிக்கடை | 656,250.00 | 50,000.00 | 3,000.00 |
| 06 | கீர்த்திசிங்க வீதி கோழியிறைச்சிக்கடை | 246,750.00 | 25,000.00 | 3,000.00 |
| 07 | விஸ்கிறீன் மாவத்தை மாட்டிறைச்சிக்கடை | 663,000.00 | 50,000.00 | 3,000.00 |

| | | |
|---|---|---|
| கேள்வி விண்ணப்பப்படிவ விநியோகம் | - | 2025-10-23ஆம் திகதி முதல் 2025-11-06ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை நீர்கொழும்பு மாநகர சபையின் கணக்காளர் பிரிவில் |
| கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் நேரம் | - | 2025-11-07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இந்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். |
| கேள்விப் படிவங்களைத் திறத்தல் | - | 2025-11-07ஆம் திகதி மு.ப. 10.05 மணிக்கு |

**நிபந்தனைகள்**

1. இலங்கைப் பிரஜைகள் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.
2. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
3. மாதிரிப் படிவக் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையைச் செலுத்தியதன் பின்னரே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.
4. விண்ணப்பத்துடன் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்க உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. வெற்றிகரமான கேள்விதாரர் இது பற்றி சபையினால் அறிவிக்கப்பட்டதன் பின் மீளளிக்கப்படாத தொகைக்குப் புறம்பாக 03 மாத வாடகைக்குச் சமமான தொகைப் பிணையை சபையில் வைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் கேள்வித் தொகையின் 50% உடன்படிக்கை செய்துகொள்ளும் வேளையில் செலுத்த வேண்டும். மிகுதி 50% தொகை முதலாவது காலப்பகுதியின் 05ஆம் மாதத்தில் செலுத்த வேண்டும்.
6. சகல கேள்விகளும் குத்தகை வழங்கப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு சட்டபூர்வமாக செல்லுபடியாகும்.
7. கேள்விப் பிணை வைப்புத் தொகையை தவிர மேற்கொள்ளப்படும் ஏனைய அனைத்து கொடுப்பனவுகளுக்கும் அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட வரி செலுத்தப்படல் வேண்டும்.
8. கேள்விப் படிவத்தில் விலைகளை எழுத்திலும் இலக்கத்திலும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பின்னர் விலைகளில் மாற்றத்தை ஏற்படுத்தினால் ஒற்றைக் கோட்டினால் வெட்டி விண்ணப்பத்தில் கையொப்பமிட்டு உறுதி செய்திருத்தல் வேண்டும். மாற்றப்பட்ட விலைகளை பிழையின்றி தெளிவாக எழுத்திலும் இலக்கத்திலும் எழுதியிருத்தல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
9. உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது சபையினால் வழங்கப்படும் மாதிரிப் படிவத்தை முறையாகப் பூர்த்தி செய்து வைப்புப் பற்றுச்சீட்டின் பிரதியொன்றுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் சமர்ப்பிக்கும் குத்தகையின் பெயரைக் குறிப்பிட்டு மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு எனும் முகவரிக்கு 2025-11-07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
10. கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அனுமதி வழங்கப்பட்ட ஒருவர் கலந்து கொள்ளலாம்.
11. எந்தவொரு நியாயமான காரணமும் இன்றி வெற்றிகரமான கேள்விதாரரினால் கேள்வி நிராகரிக்கப்பட்டால் அவரது கேள்வி வைப்புத் தொகை மற்றும் வங்கிப்பிணை முறி சபைக்குரித்தாக்கப்படும்.
12. இந்த கேள்வி தொடர்பிலான இறுதித் தீர்மானத்தை மாநகர ஆணையாளர் தன்னகத்தே கொண்டுள்ளார். மேலதிக விபரங்களை மாநகர கணக்காளரிடமிருந்து (031-2281987) அறிந்துகொள்ளலாம்.

**2025-10-21ஆம் திகதி**
**நீர்கொழும்பு மாநகர சபை அலுவலகத்தில்.**

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**